இனிமையான குழந்தைகளே! ஒருவரை மட்டுமே நினைக்கும் நினைவின் மூலம் உங்கள் ஆத்மிக நிலை ஆடாத, அசையாத ஒன்றாக ஆகிவிடும். ஒரு பாபாவைத் தவிர வேறு எதுவுமே நினைவு வராமலிருப்பதற்கான புருஷார்த்தம் செய்யுங்கள்.

கேள்வி: சிவபாபா எந்த மாதிரியான சேவை செய்கின்றார், குழந்தைகளாகிய நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

பதில்: சங்கமயுகத்தில் சிவபாபா ஆத்மாக்கள் அனைவரையும் சுடுகாட்டிலிருந்து வெளியில் கொண்டு வருகின்றார். அதாவது தேக அபிமானத்தில் வந்து பதீத்தம் (தூய்மை இழந்த) ஆகிவிட்ட ஆத்மாக்களைப் பாவனமாக்குகின்ற (தூய்மையாக) சேவை செய்கின்றார். குழந்தை களாகிய நீங்களும் கூட பாபாவுடன் கூடவே அனைவருக்கும் சாந்திதாம் மற்றும் சுகதாமத் திற்கான வழியைச் சொல்வதற்காகக் கலங்கரை விளக்கமாக (லைட் ஹவுஸ்) ஆகுங்கள். உங்களது ஒரு கண்ணில் முக்தியும் இன்னொரு கண்ணில் ஜீவன் முக்தியும் இருக்கட்டும்.

பாடல்: யார் இந்த விளையாட்டையெல்லாம் உருவாக்கியது?...

ஓம் சாந்தி. இது உண்மையில் பக்திமார்க்கத்தின் பாடலாகும். நிச்சயமாக ஒருவர் இருக்கிறார். அவருக்குத் தான் இந்த மகிமை. குழந்தைகள் நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியும்- இந்தத் தந்தை தான் அனைத்தை யும் செய்கின்றார், அவர் செய்பவர் மற்றும் செய்விப்பவராக இருக்கின்றார். சீக்கிய தர்மத்தினர் மிகவும் மகிமை பாடுகின்றனர், ஏனெனில் அது புதிய தர்மம். இதுவோ மிகப் பழைய தர்மம். பாடுகின்றார்கள், ஒரே ஓங்கார் ஓம் என்பதன் பொருளையும் பாபா மிக நன்றாகப் புரிய வைத்துள்ளார். அவர்களோ மிக நீண்டதான ஒரு விளக்கத்தைத் தருகின்றனர். பாபா கூறுகின்றார்: நான் பரமாத்மா பரந்தாமத்தில் வசிக்கிறேன். நான் மறுபிறவியில் வருவதில்லை, நீங்கள் மறுபிறவியில் வருகிறீர்கள். தந்தை வந்து குழந்தைகளுக்கு அறிமுகம் தருகின்றார். நான் குழந்தைகளுக்கு முன்பு தான் பிரத்யட்ச மாகின்றேன். அவர்களுக்கும் புரிய வைத்திருக்கிறேன்--நான் பரமபிதா பரமாத்மா, என்னைத் தான் ஆத்மாக்களாகிய நீங்கள் பக்திமார்க்கத்தில் நினைவு செய்கிறீர்கள் -- ஓ இறைவா! தந்தையே! அவருடைய மகிமையும் கூட.. பதீதபாவன், கருணையுள்ளம் கொண்டவர், துன்பங் களிலிலிருந்து விடுவிப்பவர். அவரை வழிகாட்டி என்றும் சொல்கின்றனர். இது பாண்டவ சேனை. பண்டா (வழிகாட்டி) முக்தி, ஜீவன் முக்திக்கான வழியைச் சொல்கின்றார். என் படகை அக்கரைக்குக் கொண்டு சேருங்கள் என்று பாடவும் செய்கிறார்கள் இல்லையா? பரமாத்மாவை நிச்சயமாகப் படகோட்டி என்றும் சொல்கின்றனர், தோட்டக்காரர் என்றும் சொல்கின்றனர். அவர் சொல்கிறார்--நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தீர்கள்! சத்யுக-திரேதாவில் கவலையற்ற மகாராஜாவாக இருந்தீர்கள்! எவ்வளவு வைபவங்கள் (பொருள்கள்) இருந்தன! ஸ்ரீநாத் வாயிலில் எவ்வளவு நெய் வேத்தியங்கள் (வைபவங்கள்) படைக்கின்றனர்! பக்காவாக சமைக்கின்றனர். ஜெகந்நாத் கோயிலில் பருப்பு-சோறு படைக்கின்றனர். அங்கே கறுப்பான சித்திரங்களைக் காட்டு கின்றனர். இப்போது நீங்கள் அனைவரும் கறுப்பாக இருக்கிறீர்கள். ஸ்ரீநாத் கோயிலில் மிகவும் முதல் தரமான பொருள்கள்

தயாரிக்கப்படுகின்றன. பிறகு ஸ்ரீநாத்துக்குப் படைக்கப்படும் பிரசாத உணவு பூஜாரிகளுக்குக் கிடைக்கின்றது. அவர்கள் பிறகு கடைகளில் விற்கின்றனர். அதனால் சரீர நிர்வாகம் நடைபெறுகின்றது. குழந்தைகளாகிய நீங்களோ சொர்க்கத்தின் எஜமான் ஆகிறீர்கள். அங்கே நீங்கள் சாப்பிடும் உணவு வகைகளை வேலைக்காரர்களும் (தாச-தாசிகளும்) சாப்பிடுகின்றனர். 36 வகையான உணவுகள் சமைக்கப்படுகின்றன. அவ்வளவையும் சாப்பிட முடியாது என்பதால் பிறகு தாச-தாசிகள் சாப்பிடுகின்றனர். ஆனால் இதிலேயே குஷி அடைந்து விடக் கூடாது. இராஜ்யமோ முழுவதும் உருவாக வேண்டும். நீங்கள் அங்கே மிகவும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் இருப்பீர்கள். உலகின் சர்வ சக்திவான் ஸ்தாபனை செய்த சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியம் குழந்தைகளாகிய உங்களுக்குக் கிடைக்கின்றது.

ஞானம், பக்தி, வைராக்கியம் எனச் சொல்கிறார்கள். இப்போது வைராக்கியம் இரண்டு வகைப்படும். சந்நியாசிகளுடையது எல்லைக்குட்பட்ட வைராக்கியம். வீடு வாசலை விட்டுப் போய்க் காடுகளில் அமர் கின்றனர். பிறகு அவர்கள் மறைமுகமாக (குப்தமான) உதவி செய்கின்றனர். பாரதத்திற்கு மிகுந்த நன்மை செய்கின்றனர். எப்படி வினாசத்தைப் பற்றிச் சொல்லப்படுகின்றது--இதன்மூலம் சொர்க்கத்தின் வாசல் திறக்கப்படுகின்றது. அதுபோல் இவர்களும் தூய்மையின் உதவியைச் செய்கின்றனர். அதனால் டிராமாவில் சந்நியாசிகளுக்கு மகிமை உள்ளது. ஆக, அவர்களுடையது எல்லைக்குட்பட்ட வைராக்கியம், உங்களுடையது எல்லையற்ற வைராக்கியம். உங்களை எல்லையற்ற தந்தை வைராக்கியம் மேற்கொள்ளச் செய்கின்றார். இல்லற விவகாரத்தில் இருந்து கொண்டு புத்தியால் மட்டும் மறக்க வேண்டும். இதுவோ பழைய சரீரம். இப்போது 84 பிறவிகள் முடிந்து விட்டன. தேகத்துடன் கூட தேகத்தின் அனைத்து தர்மங்களையும், அனைத்து சம்பந்தங் களையும் மறக்க வேண்டும். தன்னை ஆத்மா என உணர வேண்டும். அவர்களோ ஆத்மா நிர்லேப் (பாவ புண்ணியம் அதில் ஒட்டாது) எனச் சொல்லி விடுகின்றனர். எதை வேண்டுமானாலும் உண்ணுங்கள், அருந்துங்கள், எதுவுமே ஆத்மாவில் ஒட்டாது என்கின்றனர். அநேக வழிமுறைகள் உள்ளன. எப்படிப் பழக்க வழக்கங்கள் உள்ளனவோ அதுபோல. யார் என்ன வழிமுறையைச் சொன்னார்களோ அது நடந்து வருகின்றது. எப்படி இங்கே சிலர் ஆதிதேவை மகாவீர் எனச் சொல்கின்றனர். மகாவீர் என்று பிறகு அனுமானையும் சொல்கின்றனர். உண்மையில் நீங்கள் அனைவரும் மகாவீர்-மகாவீரணிகள். நீங்கள் மாயா மீது வெற்றி கொள்கிறீர்கள். ஸ்ரீமத் படி புருஷôர்த்தம் செய்கிறீர்கள். அங்கதனை இராவணன் அசைக்க முடியாமலிருந்தது போல் அத்தகைய மன நிலை உங்களுக்கு இருக்க வேண்டும்.

மகாவீர்களாகிய உங்களுக்கும் கூட எவ்வளவு தான் மாயாவின் புயல்கள் வந்தாலும் அசையக் கூடாது. அந்த நிலை இப்போது இருக்காது. பின்னால் அதுபோன்ற நிலை இருக்கும். எவ்வளவு தான் விகல்பங்களின் புயல் வந்தாலும் ஆடாத நிலையில் இருக்க வேண்டும். ஒருவரை மட்டுமே நினைக்கும் நினைவு இருக்க வேண்டும். வேறு யாருடைய நினைவும் வரக்கூடாது. இதில் அதிக முயற்சி செய்ய வேண்டும். பின்னாளில் தான் ஆடாத, அசையாத, உறுதியான வர்களாக ஆவீர்கள். அச்சல்கர் (அசையாத வீடு) நினைவுச் சின்னம் உள்ளது இல்லையா? அதற்கு மேல் குருசிகர் உள்ளது. இப்போது நீங்கள் புரிந்து

கொண்டிருக்கிறீர்கள், உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் சிவபாபா, பிறகு பிரம்மா-விஷ்ணு-சங்கர் சூட்சுமவதன் வாசிகள். விஷ்ணுவுக்கு நான்கு புஜங்கள் ஏன் கொடுத்திருக்கிறார்கள்? இதன் மூலம் இல்லற மார்க்கம் என்பது தெளிவாகின்றது. உங்களுடையது இல்லற மார்க்கம். பிரம்மா மூலம் ஸ்தாபனை செய்விக் கின்றார். பிராமண தர்மம் உயர்ந்ததிலும் உயர்ந்தது. தேவதைகளை விட நீங்கள் உயர்ந்தவர் கள். ஏனெனில் நீங்கள் சேவை செய்கின்றீர்கள். தெய்வீக தர்மத்தை ஸ்தாபனை செய்து, பிறகு நீங்கள் உலகின் மாலிக் (எஜமானர்) ஆகின்றீர்கள். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் ஒரு பாபா, அதாவது மகிமைக்குரியவர் ஒரே ஒரு சிவபாபா மட்டுமே, வேறு யாரும் இல்லை. ஒரு சிவபாபாவின் பிறந்த நாள் மட்டுமே முக்கிய மானதாகும். மற்றவர்களோ எந்த ஒரு சேவையும் செய்வதில்லை. இலட்சுமி- நாராயணரும் கூட பலனை அனுபவிக்கின்றனர். இப்போதோ அனைவருக்குமே இறுதி நேரம். முதன் முதலில் பக்தியும் ஒரு தந்தைக்குத் தான் ஆரம்ப மாகின்றது. அது ஒருவரை மட்டுமே வணங்கும் பக்தி. இப்போதோ அநேகரை வணங்கும் பக்தியாக மாறிவிட்டது. நீங்கள் சிவபாபாவில் தொடங்கி அனைவருடைய தொழிலையும் அறிவீர்கள். இப்போது நீங்கள் நடைமுறையில் பாபாவின் அருகில் அமர்ந்துள்ளீர்கள். நாம் மீண்டும் பாரதத்தை சொர்க்கமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவீர்கள். யார் அதுபோல் ஆக்குகின்றார்களோ அவர்கள் தான் பிறகு ஆட்சி செய்வார்கள். பிறகு அங்கே லட்சுமி-நாராயணர் சாம்ராஜ்யம் நடைபெறுகின்றது, அதன் பிறகு இராமருடைய சாம்ராஜ்யம். இப்போது அவர்களுக்கு என்ன பூஜை செய்வது? அவர்களோ கீழே இறங்கித்தான் ஆகவேண்டும். பலனை அனுபவித்து விட்டார்கள் என்றால் அத்துடன் முடிந்தது. நீங்கள் தாம் பூஜைக்குரிய நிலையிலிருந்து பூஜாரி ஆகின்றீர்கள். மற்றப்படி துதிக்கையுடன் உள்ள கணேஷ், வாலுள்ள அனுமார், 8-10 புஜங்கள் உள்ள தேவியர் எங்கே உள்ளனர்? இவையெல்லாம் பக்திமார்க்கத் தினுடைய நம்பிக்கைகள். பக்தி மார்க்கத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். 63 பிறவிகள் எப்படி எடுக்கின்றனர்? இப்போது நீங்கள் பிராமணர், பிறகு பிராமணரி லிருந்து தேவதா, சத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்களில் வருவீர்கள்-இந்த டிராமா அனாதியாக உருவாக்கப்பட்டதாகும். யாராலும் நிறுத்தி வைக்க முடியாது. குட்டிக்கரணம் விளையாடப் படுகின்றது இல்லையா? தீர்த்த ஸ்தலங்களில் குட்டிக்கரணம் அடித்துக் கொண்டே செல்கின்றனர். முன்பெல்லாம் குட்டிக்கரணத்துக்கு மிகுந்த பிரபாவம் இருந்தது. இப்போதோ அநேக வழிமுறைகள் வெளியாகியுள்ளன. ஒரு தந்தையைத் தவிர வேறு யாராலும் முக்தி-ஜீவன் முக்தி தரமுடியாது. இப்போது உங்களது ஒரு கண்ணில் முக்தி, இன்னொரு கண்ணில் ஜீவன் முக்தி உள்ளது. புத்தி சொல்கின்றது, நாம் கலங்கரை விளக்கம்.

நீங்கள் மனிதர்களுக்கு வழி காட்டக்கூடிய கலங்கரை விளக்கம். முதன்-முதலில் இனிய வீட்டிற்குச் செல்ல வேண்டும். இப்போது நாடகம் முடிவடையப் போகின்றது. குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், இந்த உண்மையான கீதை முதலானவற்றை ஏன் உருவாக்குகின்றனர்? யார் பக்குவமடையாமல் இருக்கிறார்களோ, அவர்கள் படித்துப் பக்குவமடைந்தவர்களாக ஆகத் தான். மற்றப்படி இவையனைத்தும் அழிந்து விடப்போ கின்றன. பிறகு அதே கீதை முதலியவை வெளியாகும். கீதையின் ஒரு சுலோகத்தை எடுத்துக் கொண்டு அதன் அர்த்தத்தை விளக்கிக் கொண்டே

செல்கின்றனர். கீதையிலோ பகவான் வாக்கு என்பது உள்ளது. கீதையின் பகவான் சொல்லியிருந்தார், ஆனால் புரிந்து கொள்வதில்லை. பாபா சொல்கிறார், நான் இந்த சாஸ்திரங்கள் முதலியவற்றால் கிடைப்பதில்லை. எப்போது பக்தி முடிவடைகின்றதோ அப்போது நான் வருகின்றேன். ஞானம் என்பது பகல், பக்தி என்பது இரவு. அரைக்கல்பம் இராவண இராஜ்யம். இராவணன் பார்வைக்குத் தென்படுவதில்லை. புத்தி மூலம் புரிந்து கொள்ள முடியும் -- இவர்களிடம் காமத்தின் பூதம், கோபத்தின் பூதம் உள்ளது. இந்த அசுத்த வார்த்தை சத்யுகத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. இங்கோ ஒருவர் மற்றவரை நிந்தனை செய்து கொண்டே இருக்கின்றனர். இந்த விஷயங்கள் அனைத்தும் சத்யுகத்தில் இருப்பதில்லை. இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், பாபா பதீத பாவன், சொர்க்கத்தைப் படைப்பவர். சொர்க்கத்தைப் படைத்தபின் தன்னை மறைத்துக் கொள்கின்றார். இவரை யாராலும் தெரிந்து கொள்ள முடியாது. சிவனுடைய சித்திரம் உள்ளது, ஆனால் எதுவும் தெரியாது. சிவபாபா எப்போது வந்தார், எப்படி வந்தார்? பிரம்மா, விஷ்ணு, சங்கர் பற்றிய இரகசியம் என்ன? அவர்கள் எங்கே வசிக்கின்றனர்? இலட்சுமி-நாராயணருக்கு சத்யுகத்தில் இவ்வளவு உயர்ந்த இராஜபதவி எப்படிக் கிடைத்தது? கலியுகத்திலோ அது இல்லை. எப்படி அவர்கள் இராஜ்யத்தை அடை கின்றனர்? இதை இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். குழந்தைகள் தந்தையிடம் நன்கு கற்றுப் பிறகு மற்றவர்களுக்கும் கற்றுத் தரவேண்டும். பாபா குழந்தைகள் அனை வருக்குமே சொல்கின்றார், தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளே! ஓ, என் சாலிகிராமங்களே! நான் இந்த சரீ ரத்தில் வந்து உங்களுக்குப் புரிய வைக்கிறேன், இந்த பிரம்மாவின் உடல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பிரம்மா மூலம் பிராமணர் பிறக்கின்றனர். வேறு எந்த ஒரு சத்சங்கத்திலும் இங்கிருப்பது போன்று தடை எதுவும் இல்லை. இங்கே தடை செய்கின்றனர். விஷத்தைப் (காம விகாரம்) பற்றித் தான் சண்டையெல்லாம் நடைபெறுகின்றது. அதற்காகவே பாபா சொல்கின்றார் - இந்த விஷம் முதல்-இடை-கடை முழுவதும் துக்கம் கொடுப்பதாகும். இது நம்பர் ஒன் விரோதி. இந்தக் காமமாகிய மகா சத்ருவை வெற்றி கொள்ளுங்கள்.அதுவே உங்களுக்கு முதலிலிருந்து கடைசி வரை துக்கம் கொடுத்து வந்துள்ளது. அதனால் அழைக்கின்றனர், பதீத பாவனா வா என்று. நாம் தூய்மையற்றவர்கள் என உணர்ந்திருக்கின்றனர், அதனால் தான் பாவனர் (தூய்மையானவர்கள்) முன் போய்த் தலை வணங்குகின்றனர். பவித்திரதாவுக்குக் கவர்ச்சி உள்ளது, அதனால் அவர்களுக்கு உயர்வினை அளிக்கின்றனர். அவர்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நம்மைப் போல் உயர்ந்தவர்கள் வேறு யாரும் இல்லை. அவர்களுக்குத் தான் சக்திகளாகிய நீங்கள் அம்பினை எய்திருக் கிறீர்கள். ஸ்தூல பாணங்களின் விஷயமாக இருந்தால், பரமபிதா பாணம் விடுமாறு செய்திருக் கிறார் எனச் சொல்ல மாட்டார்கள். இவை ஞானத்தின் பாணங்கள். நீங்கள் பிரம்மா குமாரிகள். அவர்கள் பிறகு பிரம்மகுமாரிகள் எனச் சொல்லிவிடுகின்றனர். பிரம்மமே பகவான் என்கிறார்கள். பாபா சொல்கிறார், இது உங்களது பிரம்மை! இப்போது உங்களிடம் சந்நியாசி களும் அநேகர் வருகின்றனர். பெரிய-பெரிய மனிதர்கள் சந்நியாசிகளிடம் செல்கின்றனர். சொல்கிறார்கள்--வாருங்கள் மகாத்மாஜி, நாங்கள் உங்களுக்கு உணவளிக்கிறோம். அநேகர் அவர்களைத் தனிப்பட்ட முறையில் கவனிக்கின்றனர். பவித்திரதாவின் அடையாளம் இல்லையா? இப்போதெல்லாம் நிறைய கொள்ளைக்காரர்களும் கூட சந்நியாசி வேடம்

அணிந்து கொள்கின்றனர். நீங்களோ முற்றிலும் தூய்மையாக இருக்கிறீர்கள். நீங்கள் இராஜ ரிஷிகள். இப்போது நீங்கள் மேலிருந்து கீழே வரை புரிந்து கொண்டு விட்டீர்கள். நாமே தேவதைகளாக, இலட்சுமி-நாராயணர் ஆகி பலனை அனுபவிக்கின்றோம். அரைக்கல்பத் திற்குப்பின் எப்போது மற்ற தர்மங்கள் வருகின்றனவோ அப்போது சண்டைகள் முதலியன நடைபெறுகின்றன. இவையெல்லாம் கூட டிராமாவில் உள்ளன. நீங்கள் மூலவதனம், சூட்சுமவதனம், ஸ்தூலவதனம், சிருஷ்டியின் முதல்-இடை-கடை பற்றி அறிந்து கொண்டு ஞானம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள். சக்கரத்தையும் அறிந்து கொண்டு விட்டீர்கள், சக்கரவர்த்தி இராஜா ஆவதற்காக. பாரதத்தில் இரட்டைக் கிரீடம் அணிந்த இராஜா- இராணியாக இந்த இலட்சுமி-நாராயணர் தாம் இருந்தனர். ஒரு கிரீடம் அணிந்தவர்கள் அவர்களை வணங்குகின்றனர். பவித்திரதாவின் சக்தி இருந்தது. சத்யுகத்தில் சம்பூர்ண நிர்விகாரிகளாக இருந்தனர். பாடவும் செய்கின்றனர், சர்வகுண சம்பன்னம் என்று.. இதை ஏன் பாடுகின்றனர்? தாங்களே பூஜாரியாக விகாரியாக உள்ளனர். பாரதத்தில் தான் முழு விளையாட்டும் நடை பெறுகின்றது. இரட்டைக் கிரீடம், ஒற்றைக் கிரீடம், இப்போதோ கிரீடம் எதுவும் இல்லை. நீங்கள் முழு சிருஷ்டி சக்கரத்தையும் அறிந்து கொண்டு விட்டீர்கள். படைப்பவர், இயக்குபவர், முக்கிய நடிகர் யார் -- நீங்கள் இப்போது அறிவீர்கள். பிறகு நீங்கள் தேவதை ஆகிவிடுவீர்கள். மாயாவினால் உருவான குப்பையானது சுத்தம் செய்யப்படுகின்றது. பாபா சொல்கிறார், நான் சலவைத் தொழிலாளியாகவும் இருக்கிறேன், மிகப் பெரிய பொற்கொல்லனாகவும் இருக்கிறேன். உங்களுடைய நகையை இப்போது நெருப்பில் இடுகின்றேன். நீங்கள் உண்மையான அணிகலன் களாக ஆகிவிடுவீர்கள். பாபா வக்கீலாகவும் இருக்கிறார். உங்களை 5 விகாரங்களின் சிறையிலிருந்து விடுவிக்கிறார். நீங்கள் இராவணனின் சிறையில் இருக்கிறீர்கள். சிறையிலிருந்து விடுவிப்பதற்காக வழியை கற்றுத் தருகிறார் தன்னைத்தான் எப்படி விடுவித்துக் கொள்வது என்று. பாபா சொல்கிறார், நான் என்னுடைய காரியத்தைச் செய்து உங்களுக்கு இராஜ்ய பாக்யத்தைத் தந்து விட்டுப் பிறகு மறைந்து கொள்வேன். நீங்கள் சுகமானவர்களாக ஆகிவிடுவீர்கள். நீங்கள் இராஜதானியைப் பெற்றுக் கொள்வீர்கள். பிறகு நான் வானப்ரஸ்தத்தில் (பரந்தாமத்தில்) அமர்ந்து விடுவேன்.

நல்லது, அனைவரைக் காட்டிலும் பாக்யசாலி யார்? பாபா கூறுகின்றார்: கன்யாக்கள் பாக்கியசாலிகள். பாபா சொல்கிறார், நானோ என்னுடைய கடமையை நிறைவேற்றுகின்றேன். நீங்கள் தூய்மையற்றவர்கள், துக்கத்தில் இருக்கிறீர்கள், அழைக்கிறீர்கள் என்றால் தந்தையின் கடமை குழந்தைகளுக்கு முக்தி-ஜீவன் முக்தி அளிப்பது. இத்தகைய முக்தியளிக்கும் வள்ளல் வேறு யாரும் கிடையாது. மற்றப்படி பட்டங்களை அவர்கள் தங்களுக்கு வைக்கச் செய்கிறார்கள், ஆனால் முற்றிலும் தவறானவை. மனிதர்களுக்கு முற்றிலும் வினாச காலத்தில் விபரீத புத்தி. குழந்தைகளாகிய நீங்கள் பாபா-பாபா எனச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். மனிதர்கள் இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். இந்த (பிரம்மா) பாபாவைத் தான் நீங்கள் நினைவு செய்வதாக அவர்கள் நினைப்பார்கள். குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், அநேக தடவை பாபா நம்மை சொர்க்கத்தின் எஜமான் ஆக்கியிருக்கிறார். இது ஈஸ்வரிய ஜென்மம். தந்தை சொல்கிறார், என்னை மட்டும் நினைவு

செய்யுங்கள், இதில் தான் முயற்சி உள்ளது. நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) பாபாவிடம் நல்லபடியாகப் படித்து மற்றவர்களுக்கும் கற்றுத்தர வேண்டும். கலங்கரை விளக்கம் ஆகி, அனைவருக்கும் முக்தி-ஜீவன்முக்தியின் வழியைக் காட்ட வேண்டும்.

2) ஒரு தந்தையை மட்டுமே நினைக்கும் நினைவின் மூலம் தனது நிலையை ஒரு நிலைப் பட்டதாக, ஆடாத அசையாததாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மகாவீர் ஆகவேண்டும்.

வரதானம்: அலௌகீகமான முறையில் கொடுத்தல் - வாங்குதல் மூலம் சதா விசேஷத்தன்மைகளில் நிறைந்தவர் ஆகக்கூடிய பரந்த மனமுடையவர் ஆகுக.

எப்படி ஏதாவது திருவிழாவிற்கு செல்கிறீர்கள் என்றால் பணம் செலவழிக்கிறீர்கள் மற்றும் ஏதாவது பொருளை வாங்குகிறீர்கள். வாங்குவதற்கு முன்பாக கொடுக்க வேண்டியிருக்கிறது, அதனால் இந்த ஆன்மீக திருவிழாவிலும் கூட பாபாவிடம் அதாவது ஒருவர் மற்றவருக்கு ஏதாவதொன்று பெறுகிறோம் அதாவது தன்னிடத்தில் தாரணை செய்கிறோம். ஏதாவது குணம் அல்லது விசேஷத்தன்மைகளை தாரணை செய்கிறீர்கள் என்றால் சாதாரணத்தன்மை தானாகவே முடிந்து போய்விடும். குணத்தை தாரணை செய்வதின் மூலம் பலவீனங்கள் இயல்பாகவே முடிந்து போய்விடும். எனவே முதலில் கொடுக்க வேண்டும். அதுபோன்று ஒவ்வொரு நொடியும் கொடுக்கல் - வாங்கல் செய்வதினால் பரந்த மனப்பான்மையுடையவர் ஆகிவிடு வதால் விசேஷத்தன்மைகள் மூலம் நிறைந்தவர் ஆகி விடுகிறீர்கள்.

சுலோகன்: தனது விசேஷத்தன்மைகளை பயன்படுத்துகிறீர்கள் என்றால் ஒவ்வொரு அடியிலும் முன்னேற்றம் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும்.